புளத்சிங்கள பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புளத்சிங்கள பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் புளத்சிங்கள பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் 3.27 ஆம் பிரிவு முதல் 3.32 ஆம் பிரிவு வரைக்கு இடையிலான பந்திக்கு இணங்காமல் மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | | |
| • மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன மானியம் ரூபா 7,793,058 ஆக இருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் அது ரூபா 28,750,206 ஆக ரூபா 20,957,148 தொகை | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| • செலுத்த வேண்டியவைகளின் கீழ் அதிகரிப்பு ரூபா 20,917,173 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சேர்க்கப்பட்டு சேர்த்துக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களில் குறைவு ரூபா 2,493,210 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் குறைத்து காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • ஆண்டின் போது பணமாக மேற்கொள்ளப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணக் கொள்வனவுகள் ரூபா 2,659,354 ஆக இருந்த போதும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 1,020,850 ஆக அதாவது ரூபா 1,638,504 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) நியமத்தின் 6.10 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்றின் கிரயத்தில் திரண்ட பெறமானத்தேய்வு மற்றும் இழிவுப்பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் பெறப்படுகின்ற பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு மேற்கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடும் போது சொத்துக்களின் இறுதிப் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (இ) நியம இலக்கம் 11.9 இன் பிரகாரம் நிதியேற்பாடு தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் புளத்சிங்கள பொதுமக்கள் விளையாட்டு மைதானத்தில் உபகூறிடல் காணி தொடர்பாக ஆதனங்கள், வியாபார தனியார் கம்பனியால் சபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கிற்குரியதாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிக் காணப்பட்ட ரூபா 2,170,000 இழப்பீட்டு பணம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டில் சரியாக வெளிப்படுத்தப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான 30 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2019 பெப்ரவரி 25 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்ட புளத்சிங்கள பல்நோக்கு கட்டிடம் மற்றும் ஏகல்ஓயா விசேட பொருளாதார நிலையம் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 04/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ரூபா 5,000 | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கு குறைவான நிலையான சொத்துக்கள் உரிய கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு களஞ்சிய இருப்பின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 769,800 நிலையான சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு களஞ்சிய இருப்பின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 769,800 நிலையான சொத்துக்கள் கணக்குகளில் அகற்றப்பட்டு இருப்புக் கணக்கு வரவு வைப்பதற்கு பதிலாக ஒதுக்கீடுகள் மற்றும் மிகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட ரூபா 1,851,646 தொகை உரிய சொத்துக் கணக்குகளில் அகற்றப்பட்டு ஆண்டின் வருமான செலவினமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு எடுக்காமல் ஒதுக்கம் மற்றும் மிகைக் கணக்கிலிருந்து மேற்கூறப்பட்ட பெறுமதி பதிவழிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன மானியம் ரூபா 36,543,264 தொகைக்குரிய 2022 ஆம் ஆண்டு முதல் விரிவான வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட மூலதன மானியங்களில் ரூபா 1,640,758 தொகை நாட்குறிப்பு இலக்கம் 68 இன் மூலம் மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் இனங்காணப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகையோ அல்லது பற்றாக்குறையோ இனங்காணப்படாத மூலதன செலவின மானிய மீதி ரூபா 91,516,773 ஆக இருக்க வேண்டிய போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 89,862,143 ஆக காண்பிக்கப்பட்டதனால் ஆண்டின் உரிமை மூலதனங்கள் ரூபா 1,654,630 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 2020 ஆம் ஆண்டில் கிடைத்த மூலதன மானியங்களில் ரூபா 198,551 தொகை நாட்குறிப்பு இலக்கம் 70 இன் மூலம் மீளாய்வாண்டின் விரிவான வருமானக்கூற்றில் இனங்காணப்பட்டிருந்த போதும் அப்பெறுமதியில் 2021 ஆம் ஆண்டில் நூலகப் புத்தகங்களுக்காக கிடைக்கப் பெற்ற மூலதன மானியங்களில் ரூபா 13,864 தொகையும் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 857,350 தொகை மற்றும் இயந்திரங்கள் ரூபா 70,000 தொகை ஒதுக்கம் மற்றும் மிகைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் உரிமை மூலதனம் ரூபா 927,350 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் அதற்கு நேரொத்த அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிக்கும் இடையே ரூபா 3,128,549 வேறுபாடு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களின் மீதியும், பட்டோலைகளின் மீதியும் சமமாக இருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,093,695 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,237,634 ஆக இருந்தது.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 18,101,272 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 21,126,375 ஆக காணப்பட்டது. | உரிய ஆண்டின் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ஆண்டின் போது அறவிடப்படாதிருந்த மையால் பட்டோலைகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 ஒப்பந்த நிர்வாகனத்தின் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா 153,351,216 கிரயத்தில் கிரயமொன்றை செய்து பல்நோக்கு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு பிரதேச செயலாளரின் கையளித்தல் | | |

கட்டளை மூலம் 2019 நவம்பரில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த துடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன் சபையின் அத்தியவசிய தேவையினை சமர்ப்பித்து நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்த தேவைகள் இனங்காணப்படாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணிப்பதற்கு முன்னர் சபையின் தேவை தொடர்பாக விசாரணை செய்யப்படாதிருந்தமை. | சபையின் தேவையை இனங்கண்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட கட்டிடம் பிரதேச செயலாளரால் 2019 நவம்பர் 23 ஆந் திகதி சபைக்கு உரித்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 02 ஆந் திகதி வரையில் 02 வருடங்களும் 08 மாத காலங்களும் கடந்திருந்த போதிலும் உரித்தைக் கையேற்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு உரித்தை கையேற்பதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சபைக்கு உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேற்கூறப்பட்ட கட்டிடம் 2019 நவம்பர் 23 ஆந் திகதி சபைக்கு உரித்து கையளிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்ட திகதி முதல் 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்ததாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு எந்த கட்டிடமோ அல்லது அறவிடலோ இன்றி பல்நோக்கு கட்டிடத்தை வழங்குவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று 30 வருடங்களுக்கு கையொப்பமிடப்பட்ட போதிலும் அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுச் சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் மூலம் கையளிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் வேண்டும். |